செய்தி வெளியீடு எண். 27 /2018

நாள்: 13.01.2018

**வேலூர் அரசு பொருட்காட்சி விழாவில் 106 பயனாளிகளுக்கு ரூ.1 கோடியே 15 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள்!**

**வேலூர் அரசுப் பொருட்காட்சியை மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜு அவர்கள் தொடங்கி வைத்தார்!!**

தமிழக அரசின் திட்டங்களை பொதுமக்கள் பார்த்து பயனடையும் வகையில் தமிழக அரசு செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் அமைக்கப்பட்ட அரசுப் பொருட்காட்சியினை வேலூர் புதிய பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள சாய் சிட்டி மைதானத்தில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜு அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

இவ்விழாவில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத் துறை அமைச்சர் திரு.சே.சி.வீரமணி அவர்கள் தலைமை தாங்கினார்.

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர்.நீலோபர் கபீல் அவர்கள் விழா சிறப்புரையாற்றினார்.

விழாவில் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர்.பொ.சங்கர், இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரையாற்றினாகள்.

விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றினார்கள்.

விழாவில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரங்கள் துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது.

மாண்புமிகு மறைந்த தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆசியுடன் வேலூர் மாவட்டத்தில் தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்பத்துறையின் சார்பில் பொங்கல் பண்டிகையையொட்டி நடைப்பெறும் 191வது அரசுப்பொருட்காட்சி தொடக்கவிழாவில் கலந்துக்கொள்வதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். தமிழர் திருநாள் பொங்கல் பண்டிகையை தமிழகத்தில் உள்ள ஏழை எளிய மக்கள் அனைவரும் சந்தோஷமாக கொண்டாட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பொங்கல் பரிசு தொகுப்பு மற்றும் விலையில்லா வேட்டி சேலைகளை வழங்கியுள்ளார்கள். மாண்புமிகு மறைந்த தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் சட்டமன்றத்தில் தான் வழங்கிய திட்டங்களை மக்களிடையே எடுத்து கூறி 2016ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்று தமிழக வரலாற்றிலேயே 32 ஆண்டுகளுக்கு பிறகு 2வது முறையாக ஆட்சியை பிடித்து தான் அளித்த வாக்குறுதிகள் அனைத்தையும் தமிழக மக்களுக்கு வழங்கியுள்ளார்கள். அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழக முதல்வர் அவர்கள் அம்மா அறிவித்து சென்ற திட்டங்கள் அனைத்தையும் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். வேலூர் மாவட்டத்தில் உள்ள மக்கள் பொங்கல் பண்டிகை விடுமுறையை சிறப்பாக கொண்டாடும் வகையில் இந்த பொருட்காட்சி குறுகிய காலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்பணியை சிறப்பாக மேற்கொண்ட மாவட்ட அமைச்சர்களுக்கும் மாவட்ட நிர்வாகத்திற்கும் எனது பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மறைந்த தமிழக முதல்வர் அம்மா அவர்கள் பிறந்த குழந்தை முதல் வயதான முதியவர் வரை அனைவருக்கம் எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வழங்கியுள்ளார்கள். கர்பிணிதாய்மாரகளுக்கு நிதியுதவி, அம்மா பரிசு பெட்டகம், பள்ளிக்குழந்தைகளுக்கு 16 வகையான இலவசபொருட்கள், மடிக்கணினி, பெண் குழந்தை பாதுகாப்புத்திட்டம், ஏழை பெண்களுக்கு தாலிக்கு தங்கம் மற்றும் திருமண நிதியுதவி, கர்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு, பெண்களுக்கு கடனுதவிகள் திட்டம், விவசாயம்,கால்நடை, கூட்டுறவு போன்ற பல்வேறு துறைகள் மூலம் திட்டங்கள் மற்ற எந்த மாநிலத்திலும் செயல்படுத்தாத திட்டங்களை செயல்படுத்தி மக்கள் மனதில் நீங்காத இடம் பிடித்தவர் மாண்புமிகு மறைந்த தமிழக முதல்வர் அம்மா அவர்கள். இன்று துவக்கப்படும் இந்த அரசுப் பொருட்காட்சியில் 27 அரசு துறைகளின் திட்டங்கள் குறித்தும், அரசின் சாதனைகள் குறித்தும் பொதுமக்கள் பார்த்து பயன்பெறும் வகையில் கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் அரசு சாரா 10 நிறுவனங்களின் கண்காட்சி அரங்குகளும் அமைக்கப்பட்டுள்ளது. அவற்றில் அத்துறை சார்ந்த திட்டங்கள் குறித்த காட்சிகள் இடம்பெற்றுள்ளன. பொதுமக்கள் இந்த அரங்குகளை கண்டுகளித்து திட்டங்களை பற்றி தெரிந்துக்கொண்டு பயன்பெறவேண்டும். இப்பொருட்காட்சியில் கலந்துக்கொண்டுள்ள அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன் என்று மாண்புமிகு செய்தி விளம்பரத்துறை அமைச்சர் அவர்கள் விழாவில் பேசினார்.

விழாவில் மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது.

மாண்புமிகு மறைந்த தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் நல்லாசியுடனும் அவர்களின் வழியில் செயல்படும் தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி பொருட்காட்சி தொடக்கவிழா மிகவும் சிறப்பாக நடைப்பெறுகிறது. வேலூர் மாவட்டத்தில் உள்ள பொதுமக்கள் அரசின் திட்டங்களை பெறுவது குறித்து இங்கு அமைக்கப்பட்டுள்ள அனைத்து துறையின் செயல்விளக்க கண்காட்சிகள் அரங்குகளில் அமைக்கப்பட்டுள்ளது. இதன்வாயிலாக மக்கள் என்னென்ன திட்டங்கள் உள்ளது என்று தெரிந்துக்கொண்டு பயன்பெறலாம். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு ஏழை எளிய மக்களுக்கு செயல்படுத்தும் திட்டங்களை எல்லாம் மக்களுக்கு கொண்டு செல்ல இதுபோன்ற பொருட்காட்சிகள் அமைக்கப்படுகிறது. செய்தி மக்கள் தொடர்புத்துறை அரசின் திட்டங்கள் குறித்து பல்வேறு வகையில் மக்களுக்கு கொண்டு செல்கிறது. ஆகவே பொதுமக்கள் இந்த பொருட்காட்சியினை பார்த்து அரசு திட்டங்களை பெற்று பயனடைய வேண்டும் என்று மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் அவர்கள் விழாவில் பேசினார்.

விழாவில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது.

மாண்புமிகு மறைந்த தமிழக முதல்வர் அம்மா அவர்களின் நல்லாசியுடன் நடைப்பெறும் அரசு பொருட்காட்சி தொடக்க விழா மிகவும் சிறப்பாக நடைப்பெறுகிறது. அம்மா அவர்களின் விஷன் 2023 திட்டத்தில் ரூ10 ஆயிரம் கோடியில் சுற்றுலா கட்டமைபிற்கும் பொழுதுபோக்கு அம்சங்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்து திட்டமிடப்பட்டுள்ளது. அம்மா அவர்களின் ஆணையின்படி 10 மாவட்டங்களில் அரசு பொருட்காட்சி சிறப்பாக நடத்தப்படுகிறது. இந்த பொருட்காட்சி நடத்துவதன் நோக்கம் அனைத்து துறைகளின் திட்டங்கள் பொதுமக்கள் அறிந்து பயனடைய வேண்டும் என்பதற்காவே. அதனடிப்படையில் அரசு திட்டங்கள் அனைத்தும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அம்மாவின் அரசு தொழிலாளர்களுக்கு பாதுகாப்பை வழங்கும் அரசாக செயல்பட்டு வருகிறது. அதனடிப்படையில் தொழிலாளர்களுக்கும் அவர்கள் குடும்பத்தாரும் பயன்பெரும் வகையில் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழகத்தில் 88 அரசு தொழிற்பயிற்சி கூடம் செயல்பட்டு வருகிறது. 26 தொழிற்பயிற்சி வகுப்புகளை புதியதாக தொடங்கி

மாணவர்களுக்கு பயிற்சி அளித்து வருகிறது. மேலும் தமிழக அரசு தற்போது 3 புதிய தொழிற்பயிற்சி கூடங்களை தொடங்கியுள்ளது. இதுபோல பல்வேறு நலத்திட்டங்களை தமிழக அரசு மக்களுக்கு செயல்படுத்தி வருகிறது. ஆகவே இந்த பொருட்காட்சியை பொதுமக்கள் பார்த்து பயன்பெற வேண்டும் என்று மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

இவ்விழாவில் வருவாய்த்துறையின் சார்பில் 05 பயனாளிகளுக்கு ரூ.82,500 மதிப்பிலான நலிந்தோர் நிவாரண உதவித்தொகை, 10 நரிக்குறவர்களுக்கு வீட்டுமனைப்பட்டாக்களும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் 27 மாணவ மாணவிகளுக்கு ரூ.10,72,000 மதிப்பிலான கல்வி உதவித்தொகை மற்றும் 27 மலை வாழ் மக்களுக்கு ரூ1,00,02,250 மதிப்பிலான வன நில உரிமை ஆணையினையும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மூலம் 12 பயனாளிகளுக்கு விலையில்லா தேய்ப்பு பெட்டி மற்றும் தையல் இயந்திரங்களையும், உதவி ஆணையர் கலால் மூலம் 05 பயனாளிகளுக்கு ரூ1.50,000 மதிப்பிலான கறவை மாடுகளையும், வேளாண்மைத்துறை மூலம் ஒரு பயனாளிகளுக்கு விசைத்தெளிப்பான்களையும், சமூகநலத்துறை மூலம் 2 பயனாளிகளுக்கு பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் முதிர்வுத் தொகையினையும், மாவட்ட வழங்கல் துறையின் மூலம் 14 பயனாளிகளுக்கு மின்னனு குடும்ப அட்டைகளையும் மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் மூலம் 6 பயனாளிகளுக்கு ரூ.82,600 மதிப்பிலான உதவி உபகரணங்களையும் ஆக மொத்தம் 106 பயனாளிகளுக்கு ரூ.1 கோடியே 15 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் வழங்கினார்கள்.

இவ்விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.சு.ரவி, திரு.ஜி.லோகநாதன், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் திரு.உல ரவீந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.தா.செங்கோட்டையன், மாவட்ட ஊரகவளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பெ.பெரியசாமி, ஆவின் தலைவர் திரு.த.வேலழகன். மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் திரு.ஏ.ஜி.விஜயன், கூட்டுறவு பண்டக சாலை தலைவர் திரு.டி.ராஜா, கூட்டுறவு அச்சக தலைவர் திரு.டபிள்யு.ஜி.மோகன், மற்றும் அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் பொதுமக்கள் கலந்துக்கொண்டனர்.

செய்தி வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் வேலூர்.